+2 பொதுத் தேர்வு! வெற்றி பெற்றுள்ள மாணவர்களுக்கு வாழ்த்துகள்!

# கல்வியே வாழ்வின் வெற்றிக்குத் துணை!

## வலைதளப் பதிவில் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, மே 9 -**

**பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் வெற்றி பெற்றுள்ள அனைத்து மாணவ - மாணவிகளுக்கும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் வெற்றி பெற்றுள்ள அனைத்து மாணவ - மாணவிகளுக்கும் வாழ்த்துகள்!**

**95.2% மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். Anbil_Mahesh அவர்கள் தொடர்புகொண்டு, சென்ற ஆண்டைவிட அதிகமான மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்று பெருமிதத்தோடு கூறியபோது, பெருமகிழ்ச்சி அடைந்தேன்.**

**மாணவச் செல்வங்கள், வாழ்வில் மேன்மையடைய மேற்படிப்புகளில் மேலும் கவனம் செலுத்திப் படியுங்கள். இத்தேர்வில் இம்முறை தேர்ச்சி பெறத் தவறியவர்கள் மனம் தளர வேண்டாம்; உங்களுக்கான அடுத்தடுத்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறுங்கள்!**

**கல்வியே வாழ்வின் வெற்றிக்குத் துணை!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகளை பிடிக்காமல் காங்கிரஸ் மண்டலத் தலைவர் கார்த்திக் தி.மு.க.வில் இணைந்தார். திண்டுக்கல் மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவரும், காங்கிரஸ் மாவட்ட துணைத் தலைவருமான கார்த்திக் கலைஞர் மாளிகை தி.மு.க.அலுவலகத்தில் மாநகர தி.மு.க. செயலாளர் ராஜப்பா முன்னிலையில் தன்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டார். இந்நிகழ்வில் மேயர் இளமதி, மாவட்ட துணைச் செயலாளர் பிலால் உசேன், மாநகர துணைச் செயலாளர் அழகர்சாமி, பொருளாளர் மீடியா சரவணன், பகுதி பொறுப்பாளர்கள் ராஜேந்திரகுமார், பஜ்லுல் ஹக், சந்திரசேகர், சூசை ராபர்ட், மண்டலத் தலைவர்கள் ஆனந்த், ஜான் பீட்டர், மாவட்டப் பிரதிநிதிகள் அஞ்சல் கணேசன், ஆனந்த்குமார், ஏ.வி.குமார், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ், பாலகிருஷ்ணாபுரம் பாண்டி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

மேற்கு வங்க தேர்தல் முடிவுகளுக்கு எதிராக

# உச்ச நீதிமன்றத்தை நாட திரிணாமுல் காங்கிரஸ் முடிவு!

## மம்தா பானர்ஜி அறிவிப்பு!

கொல்கத்தா, மே 9 -

மேற்கு வங்க தேர்தல் முடிவுகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தை நாட திரிணாமுல் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. மேற்குவங்க முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய மறுத்த மம்தா பானர்ஜி, “அவர்கள் என்னை பதவிநீக்கம் செய்து குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தட்டும் என்றும் வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு செய்து தேர்தலை பாஜக கொள்ளையடித்துவிட்டதாக குற்றம் சாட்டி உச்ச நீதிமன்றத்தை நாடப்போவதாகவும் கூறியுள்ளார். .

பாஜக மற்றும் இந்திய தேர்தல் ஆணையம் இணைந்து தேர்தலில் முறைகேடு (Rigging) செய்ததாக மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார்.

தேர்தல் முடிவுகளை எதிர்த்து உச்சநீதி மன்றத்தை நாடப்போவதாகவும், தானும் தனது அமைச்சரவை சகா சந்திரிமா பட்டாச்சார்யாவும் வழக்கறிஞர்களாக மீண்டும் பணியாற்றி இந்த வழக்கை நேரில் நடத்தப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணும் முறையில் முறைகேடுகள் நடந்ததாகவும், குறிப்பாக 100க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பாஜக வெற்றியை



“திருடியுள்ளதாகவும்” மம்தா பானர்ஜி கூறியுள்ளார்.

மக்களின் தீர்ப்பால் தான் தோற்கவில்லை என்றும், ஒரு சதித் திட்டத்தாலேயே தனது கட்சி தோற்கடிக்கப்பட்டதாகவும் கூறி, முதல்வர் பதவியை ராஜினாமா செய்ய அவர் மறுத்துவிட்டார்.

இதற்கிடையில், மேற்கு வங்க தலைமை தேர்தல் அதிகாரி மாநில ஆளுநரிடம் தேர்தல் முடிவு களுக்கான அரசிதழ் அறிவிப்பைச் சமர்ப்பித்துள்ளார். இதன் மூலம் மாநிலத்தில் பாஜக புதிய அரசை அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. முன்னதாக, வாக்கு எண்ணும் பணியில் மத்திய அரசு ஊழியர்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக திரிணாமுல் காங்கிரஸ் தொடர்ந்த வழக்கை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது குறிப்பிடத்தக்கது.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகள் பிடிக்காமல்

# காங்கிரஸ் மண்டலத் தலைவர் கார்த்திக் தி.மு.க.வில் இணைந்தார்!

## மாநகரச் செயலாளர் ராஜப்பா முன்னிலையில்!

திண்டுக்கல்,மே 9 -

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகளை பிடிக்காமல் காங்கிரஸ் மண்டலத் தலைவர் தி.மு.க.வில் இணைந்தார்.

திண்டுக்கல் மாநகராட்சி கிழக்கு மண்டல தலைவரும், காங்கிரஸ் மாவட்ட துணைத் தலைவருமான கார்த்திக் கலைஞர் மாளிகை தி.மு.க. அலுவலகத்தில் மாநகர தி.மு.க. செயலாளர் ராஜப்பா முன்னிலையில் தன்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் மேயர் இளமதி, மாவட்ட துணை செயலாளர் பிலால் உசேன், மாநகர துணை செயலாளர் அழகர்சாமி, பொருளாளர் மீடியா சரவணன், பகுதி பொறுப்பாளர்கள் ராஜேந்திரகுமார், பஜ்லுல் ஹக், சந்திரசேகர், சூசை ராபர்ட், மண்டல தலைவர்கள் ஆனந்த், ஜான் பீட்டர், மாவட்டக் கழகப் பிரதிநிதிகள் அஞ்சல் கணேசன், ஆனந்த்குமார், ஏ.வி.குமார், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ், பாலகிருஷ்ணாபுரம் பாண்டி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

தமிழ்நாட்டில் தொடர்ந்து நீடித்து வரும்

# வறண்ட வானிலை காரணமாக 10ஆம் தேதி வரை மழை நீடிக்கும்!

சென்னை, மே 9 -

தமிழ்நாட்டில் தொடர்ந்து நீடித்து வரும் வறண்ட வானிலை காரணமாக 3 இடங்களில் நேற்று 102 டிகிரி வெயில் கொளுத்தியது. இதற்கிடையே சில இடங்களில் மழையும் பெய்துள்ளது. அதன் தொடர்ச்சியாக மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மய்யம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது கத்திரி வெயில் தொடங்கியுள்ளது.

இதையடுத்து, பெரும்பாலான இடங்களில் வெப்ப நிலை இயல்பைவிட 2 டிகிரி செல்சியஸ் முதல் 4 டிகிரி செல்சியசுக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

அதனால் கரூர், ஈரோடு, வேலூர் பகுதிகளில் நேற்று முன்தினம் 102 டிகிரி வெயில் கொளுத்தியது. பிற இடங்களில் சராசரியாக 100 டிகிரி வெயில் நிலவியது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், வளி மண்டலத்தில் சுமார் 1.5 கிமீ உயரத்தில் தெற்கு மத்திய பிரதேசத்தின் மய்யப் பகுதிகள் முதல் மன்னார் வளைகுடா வரையில் வதர்பா, மரத்வாடா, உள் கருநாடகா மற்றும் தமிழ்நாடு வழியாகவும், தமிழ்நாடு வழியாகவும் ஒரு வளி மண்டல காற்று மூத்த தாழ்வுப் பாதை நிலை கொண்டுள்ளது.

அதனால் திண்டுக்கல், கரூர், திருச்சி, நாமக்கல், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் நேற்று முன்தினம் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்தது.

அதன் தொடர்ச்சியாக இன்றும், கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் பலத்த காற்றும் கூடிய கனமழை பெய்யும். இதேநிலை 10ஆம் தேதி வரை நீடிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வெப்பநிலை இயல்பை விட 23 டிகிரி செல்சியஸ் வரையில் அதிகரித்து காணப்படும். சென்னையில் 102 டிகிரி வெயில் நிலவும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை சென்னை வானிலை ஆய்வு மய்யம் தெரிவித்துள்ளது.

தி.மு.க. தலைவரின்

# அரசியல் தலைமைப் பண்பை நிலைநாட்டும் அறிவிப்பு!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பாராட்டு!

சென்னை, மே 9 -

விஜய் ஆட்சி அமைக்க இடையூறாக இருக்கமாட்டோம்! என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பினை வரவேற்று அறிக்கை வெளியிட்டுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள்,



“இவ்வறிவிப்பு, தி.மு.க. தலைவரின் அரசியல் தலைமைப் பண்பை நிலை நாட்டும் அறிவிப்பு!” என்று பாராட்டியுள்ளார்.

வைகோ அவர்களின் அவ்வறிக்கை வருமாறு:-

தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைப்பதற்கு இடையூறாக இருக்க மாட்டோம் என்று தி.மு. கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருப்பது பாராட்டத்தக்கதும், உரிய நேரத்தில் சொல்லப்பட்டதும், அன்னாரது அரசியல் தலைமைப் பண்பை நிலைநாட்டுவதுமான அறிவிப்பாகும்.

இவ்வாறு அவ்வறிக்கையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குறிப்பிட்டுள்ளார்.

செலவுகள் அதிகரிப்பால் ரூ.6,700 கோடி சேமிக்க

# 2,000 பேரை பணிநீக்கம் செய்ய உள்ள பி.பி.சி. நிறுவனம்!

லண்டன், மே 9 -

நிதி நெருக்கடி மற்றும் செயல்பாட்டுச் செலவுகள் அதிகரிப்பு காரணமாக, புகழ்பெற்ற ஊடக நிறுவனமான பி.பி.சி., பணி நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது.

பி.பி.சி.யின் மிகப் பெரிய செலவுக் குறைப்பு முயற்சிகளில் ஒன்றிற்கான திட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, அந்த நிறுவனம் 2026ஆம் ஆண்டிற்கான பெரும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. பி.பி.சி. நிறுவனம் ரூ.6700 கோடியை சேமிக்கும் திட்டத்தை செயல்படுத்த 2000 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது.

சுமார் 600 மில்லியன் யூரோ சேமிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2,000 ஊழியர்களை குறைக்க பி.பி.சி. திட்டமிட்டு உள்ளது. இதில், செய்திப் பிரிவு விகிதாச்சாரத்திற்கு அதிகமான 15 சதவீதக் குறைப்பை எதிர்கொள்ளும் என தகவல் வெளியாகி இருக்கிறது.

கூகுளின் முன்னாள் நிர்வாகியான மாட் பிரிட்டின், வரும் மே 18 அன்று தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்கத் தயாராகி வரும் நிலையில், இந்த தகவல் வெளியாகி இருக்கிறது.

அவர் பி.பி.சி. நிறுவனத்தின் தலைமை இயக்குநராக பொறுப் பேற்ற உடன் இந்த நடவடிக்கை விரைந்து எடுக்கப்படும் என தெரிகிறது. பி.பி.சி., உலகெங்கிலும் கணிசமான எண்ணிக்கையிலான தொழிலாளர்களைப் பணியமர்த்தியுள்ளது.

மேலும், தனது பார்வையாளர்களுக்கு சமீபத்திய செய்திகளை வழங்குவதற்காக, ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பணியாளர் வலையமைப்புடன் இணைந்து செயல்படுகிறது.

இந்த சூழலில் சமீபத்தில் வெளியாகி இருக்கும் தகவல்களின்படி, குறிப்பாக பி.பி.சி. செய்திப் பிரிவில் இந்த ஆட்குறைப்புகள் எதிர்பார்த்ததை விடக் கடுமையாக இருக்கலாம் என்றும், தலைமைப் பொறுப்புகளில் மாற்றங்கள் ஏற்கெனவே நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

பி.பி.சி. எடுக்க திட்டமிட்டு உள்ள ஆட்குறைப்பு நடவடிக்கைகளுக்கான முக்கிய காரணம், அந்த நிறுவனம் மேற்கொள்ள உள்ள செலவு குறைப்பு உத்தி ஆகும். பி.பி.சி. எதிர்கொள்ளும் நிதி நெருக்கடிகள் காரணமாகவே இந்த ஆட்குறைப்பு முடிவு எடுக்கப்பட்டது.

நிறுவனம் இந்த முடிவை எடுத்துள்ளதற்கு அதிக உற்பத்தி பணவீக்கம், உரிம கட்டண வருவாய் குறைவு (Licence fee pressure), மற்றும் உலகளாவிய பொருளாதார மந்தநிலை ஆகியவை காரணமாகக் கூறப்படுகின்றன.

பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள்

# 100 சதவீதம் தேர்ச்சி காட்டியுள்ள 2,639 மேல்நிலைப் பள்ளிகள்!

சென்னை, மே 9 -

தமிழகத்தில் கடந்த மார்ச் 2ஆம் தேதி துவங்கி முதல் 26ஆம் தேதி வரை நடைபெற்ற பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த தேர்வில் மாநிலம் முழுவதும் இருந்து சுமார் 8 லட்சம் மாணவ - மாணவிகள் எழுதியிருந்தனர்.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் கடந்த ஏப்ரல் 6 முதல் 20க்குள் முடிக்கப்பட்டு, மதிப்பெண்கள் இணையதளத்தில் பதிவேற்றும் பணிகள் நிறைவடைந்த நிலையில் முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த தேர்வில் மொத்தம் 95.2%பேர் தேர்ச்சி பெற்று உள்ளனர்.

வழக்கம் போல் மாணவர்களை விட மாணவிகளே அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவிகள் 97 சதவீதம் பேரும், மாணவர்கள் 93.1 சதவீதம் பேரும் இந்த பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் மொத்தமுள்ள 7,536 மேல்நிலைப் பள்ளிகளில் 2,639 பள்ளிகள் 100% தேர்ச்சியை காட்டி இருக்கின்றன.

இதில் அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் அடங்கும். அதே நேரம் 5,170 பள்ளிகள் 95% தேர்ச்சியை காட்டி இருக்கின்றன.

அதேபோல 100% தேர்ச்சி பெற்ற அரசு மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 489ஆக உள்ளது. 95% தேர்ச்சி பெற்ற அரசு மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 1,572 ஆகும்.

பள்ளிகள் வகைப்பாடு வாரியான தேர்ச்சி சதவிதம் கீழ் வருமாறு:-

1. அரசுப் பள்ளிகள்- 92.16% தேர்ச்சி
2. அரசு உதவி பெறும் பள்ளிகள் - 96.14% தேர்ச்சி
3. தனியார் சுயநிதிப் பள்ளிகள் - 98.72% தேர்ச்சி
4. இருபாலர் பள்ளிகள் - 95.30% தேர்ச்சி
5. பெண்கள் பள்ளிகள் - 97.08% தேர்ச்சி
6. ஆண்கள் பள்ளிகள் - 90.49% தேர்ச்சி

பெண்கள் பள்ளிகள், ஆண்கள் பள்ளிகளை விட 6.59% சதவீதம் கூடுதலாகவும், இருபாலர் பயிலும் பள்ளிகள் ஆண்கள் பள்ளிகளை விட 4.81% சதவீதம் கூடுதலாக தேர்ச்சி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

வேலூர் மண்டல தொ.மு.ச. பொதுச் செயலாளர்

# தா.இரமேஷ் பணி நிறைவு - பாராட்டு விழா!

## கழக முன்னணியினர் - தொ.மு.ச. நிர்வாகிகள் பங்கேற்பு!

ஆர்க்காடு, மே 9 -

வேலூர் மண்டல தொ.மு.ச. பொதுச் செயலாளரும், மாவட்டக் கவுன்சில் செயலாளருமான தா.இரமேஷ் பணி நிறைவு பாராட்டு விழா நாளை (10.05.2026) காலை 6 மணியளவில் நடைபெறுகிறது.

ஆர்க்காடு பணிமனை எதிரில் அமைந்துள்ள எஸ்.பி.ஆர்.மகால் திருமண மண்டபத்தில் நடைபெறும் இப்பாராட்டு விழாவில், மாவட்டக் கழக முன்னணியினர், தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள், வேலூர் மண்டல நிர்வாகிகள், போக்குவரத்துக் கழக பணிமனை நிர்வாகிகள், நகரக் கழக நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள், ஊழியர்கள் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகி 48 மணி நேரம் முடிவதற்குள்

# ‘பி.எம்.ஶ்ரீ.’ திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க - ஒன்றிய அரசு கடிதம்!

## இந்திய மாணவர் சங்கம் கடும் கண்டனம் !

சென்னை, மே 9 -

இதுகுறித்து இந்திய மாணவர் சங்கத்தின் தமிழ்நாடு மாநிலக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒன்றிய அரசின் பி.எம்.ஶ்ரீ திட்டத்திற்கு ஒப்புதல் வழங்க வேண்டும் என்ற அரசியல் நிபந்தனையுடன் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய கல்வி நிதியை தொடர்ந்து நிலுவையில் வைத்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமக்ரா சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய சுமார் 2 ஆயிரத்து 151 கோடி நிதியை தாமதப்படுத்தி, புதிய கல்விக் கொள்கை மற்றும் PM SHRI திட்டத்தை மாநிலத்தின் மீது திணிக்க முயற்சிப்பது கூட்டாட்சி அமைப்பின் அடிப்படை கொள்கைகளுக்கு நேரடி அச்சுறுத்தலாகும் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கல்வி என்பது அரசியல் பேரம் பேசும் கருவி அல்ல; அது மாணவர்களின் அடிப்படை உரிமை. ஆனால் ஒன்றிய அரசு, கல்வி நிதியை ஒரு அரசியல் அழுத்த கருவியாக மாற்றி மாநிலங்களின் கொள்கை சுயாட்சியை பலவீனப்படுத்த முயற்சிக்கிறது என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநில உரிமைகளை மீறும் வகையில் கல்வியில் தலையிடும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# மணிப்பூரில் வன்முறை! வீடுகளுக்கு தீ வைப்பு!

இம்பால், மே 9 -

மணிப்பூரில் காம்ஜோங் மாவட்டத்தில் காசோம் குல்லன் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட நம் லீ, வாங்லீ மற்றும் சோரோ ஆகிய தாங்குல் நாகா கிராமங்கள் இந்தியாமியான்மர் சர்வதேச எல்லையில் இருந்து ஒரு கிலோ மீட்டருக்கும் குறைவான தொலைவிலேயே அமைந்துள்ளன.

இந்நிலையில் இந்த கிராமங்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஆயுதங்களுடன் வந்த தீவிரவாதிகள் வீடுகளுக்கு தீ வைத்துள்ளனர். வீடுகளில் இருந்தவர்களை தப்பியோடும்படியும் அவர்கள் எச்சரித்துள்ளனர். இதனால் வீடுகளில் இருந்தவர்கள் அலறியடித்துக்கொண்டு வெளியேறி அருகில் இந்த காடுகளில் தஞ்சம் அடைந்தனர்.

இந்த தாக்குதலில் நம்லீ கிராமத்தில் இரண்டு வீடுகள், வாங் லீ கிராமத்தில் 4 வீடுகள், சோரோ கிராமத்தில் ஒரு சர்ச் உட்பட ஏராளமான வீடுகள் தீயில் எரிந்து நாசமாயின.

இதில் மூதாட்டி ஒருவர் மட்டும் காயமடைந்துள்ளார்.